**செ. கு. எண்: 84** **நாள்: 29.03.2013**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 29.3.2013</u>

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் ஒன்றியம், பட்டணம் கிராமத்தில் 25.3.2013 அன்று மண் அள்ளும் பணியை மேற்கொண்டிருந்த போது, எதிர்பாராமல் மண் சரிந்து விழுந்ததில் பெண் தொழிலாளர்கள் திரு. காந்தி என்பவரின் மனைவி எழிலரசி, திரு. மணி என்பவரின் மனைவி ரமணி மற்றும் திரு. ரமேஷ் என்பவரின் மனைவி குமாரி ஆகியோர் சம்பவ இடத்திலேயும், திரு. ஏழுமலை என்பவரின் மனைவி அமுதா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**